**<u>முதல்வர் தனிக்கவனம் / மிகவும் அவசரம்</u>**

## தொழில் நுட்பக் கல்வித் துறை

அனுப்புநர்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை – 600 025.

பெறுநர்
முதல்வர் / முதல்வர் (பொறுப்பு)
அனைத்து அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள்.

### கடித எண்.25470/கே–1/2011, நாள் 7.1.2016

ஐயா / அம்மையீர்,

பொருள்: பண்டகம் – தொழில் நுட்பக் கல்வித் துறை – அரசு நிதியுதவி பெறும் பயிலகங்களில் சுயநிதி திட்ட பாடப்பிரிவுகளில் ( **Self Supporting Course** ) சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள் வழங்க கூடாது என அரசால் தெரிவித்தது விவரம் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை: அரசு கடித எண்.16913/உயர்கல்வி (ஏ1) துறை/2015–3, நாள் 22.12.2015.

----

பார்வையில் காணும் அரசு கடிதத்தில், **அரசு நிதியுதவி பெறும் பயிலகங்களில் சுயநிதி பாடப்பிரிவுகளில் ( Self Supporting Course ) சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள் வழங்க கூடாது என அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.** எனவே 2014–2015 மற்றும் 2015–2016–ம் கல்வியாண்டுகளில் அரசு நிதியுதவி பெறும் பயிலகங்களில் சுயநிதி திட்ட பாடப்பிரிவுகளில் ( Self Supporting Course ) சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு பெறப்பட்டு இருப்பில் உள்ள மடிக்கணினிகளை உடனடியாக சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலங்களில் திரும்ப ஒப்படைத்து விட்டு PROFORMA I-A–ஐ பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உ. செல்வி 7/1.2016

தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்காக.